பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

02 10 2025 THURSDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு கதர் ஆடைகள் மற்றும் கதர் பொருட்கள் உற்பத்திக்கு புத்துயிர் ஊட்டியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. தேசப்பிதா மகாத்மா காந்தியின் பிறந்தநாளையொட்டி, தூய்மையே சேவை மற்றும் தூய்மை இந்தியா இயக்கப்பணிகள் இன்று நடைபெற்றன.

3. மின்னணு சாதன உற்பத்தித் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டிற்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல், சேமிப்பு மற்றும் உரங்கள் இருப்பு தொடர்பாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

5. Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Srikanth காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<>>>>>

கதர் ஆடைகளை மக்கள் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

காந்தி ஜெயந்தி மற்றும் தீபாவளியை முன்னிட்டு, புதுதில்லியில், கதர் சிறப்பு விற்பனையை தொடங்கிவைத்து பேசிய அவர், ஆண்டுக்கு குறைந்தது 5 ஆயிரம் ரூபாய் அளவிற்கு ஒவ்வொருவரும் கதர் ஆடைகளை வாங்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

வியாபாரிகளும், மக்களும் உள்நாட்டு தயாரிப்புகளை ஊக்குவிக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கதர் பொருட்களின் உற்பத்திக்கு புத்துயிர் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் விடுதலை போராட்டத்தில் கதர் மற்றும் சுதேசி முக்கிய இடம்பெற்றதை சுட்டிக்காட்டிய திரு அமித் ஷா, மகாத்மா காந்தியின் தொலைநோக்குக் கொள்கைகள் எண்ணற்ற மக்களுக்கு வாழ்வாதாரமாக திகழ்வதாகவும் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மத்திய அரசின் மின்னணு சாதன உற்பத்தித் திட்டத்தின்கீழ், இதுவரை சுமார் ஒரு லட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீட்டிற்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்ததாக தெரிவித்தார்.

இத்திட்டத்தில் 59 ஆயிரத்து 350 கோடி ரூபாய் முதலீடுகளை திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், தற்போது அதைவிட இருமடங்கிற்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று, 4 லட்சத்து 56 ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கு உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், பத்து லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக மதிப்பீடுகள் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக முதலீடு, உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

தேசப்பிதா மகாத்மா காந்தியின் பிறந்தநாளையொட்டி, தூய்மையே சேவை மற்றும் தூய்மை இந்தியா இயக்கப்பணிகள் இன்று நடைபெற்றன.

இதன் ஒருபகுதியாக, மத்திய சுற்றுலாத்துறையின் சென்னை பிரிவும், உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் சங்கமும் இணைந்து சென்னை மெரினா கடற்கரையில் சிறப்பு தூய்மை இயக்கப்பணிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தன.

கடற்கரையில் உள்ள உழைப்பாளர் சிலையையொட்டிய புல்வெளி, எம் ஜி ஆர் நினைவிடத்தையொட்டிய கடற்கரை பகுதி ஆகியவற்றில் தீவிர தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டன.

இதனிடையே, சேலம் ரயில்வே கோட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரயில்வே ஊழியர்கள் பங்கேற்ற தூய்மைப்பணி பல்வேறு இடங்களில் நடைபெற்றதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*(Sound Byte – விஜய்குமார் – 36 Sec. )*

<<<<<>>>>>

டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் சேமிப்பு மற்றும் உரங்கள் இருப்பு தொடர்பாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் காணொலி வாயிலாக இன்று நடைபெற்றது.

நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்ட ஆட்சியர்கள் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை தற்போது வரையுள்ள இருப்பு மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் கேட்டறிந்தார்.

கொள்முதல் செய்யப்படும் நெல்லை உடனடியாக அரவை ஆலைகள் மற்றும் சேமிப்புக் கிடங்குகளுக்கு கொண்டு செல்லும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பாடுகளை கண்காணிக்க சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும், தேவையெனில் வேறு மாவட்டங்களில் இருந்தும் அதிகாரிகளை வரவழைத்து இப்பணிகளை மேற்கொள்ளலாம் எனவும் அவர் ஆலோசனை வழங்கினார்.

மழை காலத்தில் கூடுதல் கவனத்துடன் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

உரத்தேவையை நிறைவு செய்வதற்கான பணிகளை வேளாமைத்துறை அலுவர்கள் மூலம் மேற்கொள்ளலாம் என்றும் திரு மு.க.ஸ்டாலின், டெல்டா மாவட்ட ஆட்சியர்களிடம் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்தார்.

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் – 50 Sec.)*

<<<<<>>>>>

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்துக்கு உட்பட்ட ரயில் நிலையங்களில் கடந்த செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட சோதனையின்போது டிக்கெட் இன்றி பயணம் செய்தவர்களிடமிருந்து ஆறு கோடியே 25 லட்சம் ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஒரு லட்சத்து 21 ஆயிரம் பேர் டிக்கெட் இன்றி பயணம் செய்தது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30-ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட சிறப்பு சோதனையின்போது மட்டும் 3 ஆயிரத்து 254 பேர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 18 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலின் நான்கு மாட வீதியில் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இனறு ஆய்வு செய்தார்.

\-----------------

பிரதமர் திரு நரேந்திர மோடியின் பிறந்தநாளையொட்டி ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் பிஜேபி சார்பில் ரத்த தானம் வழங்கப்பட்டது.

\------------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில், சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்ற ஸ்கேட்டிங் நிகழ்ச்சியில் ஏராளமான மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

------------------

நாமக்கல்லில் காந்தி ஜெயந்தியையொட்டி, மாவட்ட சிலம்ப பயிற்சியாளர்கள் பங்கேற்ற மாபெரும் சிலம்ப விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

----------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடப்பாண்டு 108 லட்சம் ரூபாய் அளவிற்கு கதர் பொருட்கள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

-----------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து கேரளாவுக்கு கடத்த முயன்ற தொள்ளாயிரத்து 10 லிட்டர் மானிய விலை மண்ணெண்ணெய் பறிமுதல் செய்யப்பட்டது.

-------------------

சென்னை எம் ஜி ஆர் நகர் பகுதியில் உடல்வலி நிவாரண மாத்திரைகளை சட்ட விரோதமாக விற்பனைக்கு வைத்திருந்த ஒருவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

---------------

திருச்சி மாவட்டம் முசிறி அருககே உள்ள குணசீலம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோவில் தேரோட்டத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தேர் இழுத்தனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Srikanth காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 25-23 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Siddhanth Gupta-வை வென்றார்.

இப்போட்டியில், மிதுன் மஞ்சுநாத், Dayanand Shimoga ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில், Tasnim Mir, Tanya Hemanth, Devika Sihag, Shriyanshi Valishetty, Anupama Upadhyaya ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

பிரிஸ்பேனில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 58 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<<<<>>>>>